

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி நேற்று முன்தினம் (7.8.2025) சென்னை அண்ணா அறிவாலயத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஏற்பாட்டின் பேரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் சார்பில், 'தியாகமறவர்' சி.சிட்டிபாபு தொகுத்த "தி.மு.க வரலாறு", முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எழுதிய "தமிழ்நாடு போராடும் ! தமிழ்நாடு வெல்லும்!", "இளைய திராவிடம் எழுகிறது!" இளம் பேச்சாளர்களுக்கான பயிற்சி முகாம் கட்டுரைகள், முனைவர். இரா. சபாபதி மோகன் எழுதிய "மாநில சுயாட்சி முழக்கம், கோவி. லெனின் எழுதிய "திராவிட இயக்க வரலாறு கேள்விபதில், தமிழன் பிரசன்னா எழுதிய "இந்தித் திணிப்பை எதிர்க்கிறோம் ஏன் ?", சூர்யா கிருஷ்ணமூர்த்தி எழுதிய "இந்தியாவுக்கு வழிகாட்டும் திராவிடமாடல்!", சு.விஜயபாஸ்கர் எழுதிய "இந்தியாவில் சமூக நீதியும் இட ஒதுக்கீடும்" ஆகிய எட்டு நூல்களை வெளியிட்டார். இந்நிகழ்வில், கழகத்தின் பொதுச்செயலாளரும், நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சருமான துரைமுருகன், கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு, கழக கொள்கை பரப்புச் செயலாளர் சபாபதி மோகன், கழக தொழில்நுட்ப அணி ஆலோசகர் கோவி. லெனின், தலைமைக்கழக செய்தி தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா, துணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி, நக்கீரன் கோபால், கலைஞர் செய்திகள் தொலைக்காட்சியின் செய்திப் பிரிவு ப. திருமாவேலன், முரசொலி நாளிதழின் செய்தி ஆசிரியர் கே.சேது மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி நேற்று முன்தினம் (7.8.2025) சென்னை அண்ணா அறிவாலயத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஏற்பாட்டின் பேரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், "கலைஞர் நிதிநல்கை" திட்டத்தைத் தொடங்கி வைத்து அதன் இலச்சினையை வெளியிட, திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு அவர்கள் பெற்றுக்கொண்டார். இந்நிகழ்வின்போது, நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, மூத்த பத்திரிகையாளர் நக்கீரன் கோபால், கலைஞர் செய்திகள் தொலைக்காட்சியின் செய்திப் பிரிவு ப. திருமாவேலன், முரசொலி நாளிதழின் செய்தி ஆசிரியர் கே.சேது ஆகியோர் உடனிருந்தனர்.



டெல்லியில் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் மனோகர் லால் கட்டார் அவர்களை மாநிலங்களவைக் கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா சந்தித்து டெல்லியில் கழகத்திற்கு அலுவலக கட்டிடத்திற்கான வழங்க வேண்டிய கூடுதல் இடம் கேட்டு கடிதம் கொடுத்து விளக்கியபோது எடுத்த படம்.

### மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் முன்னிலை!

# நாகை மாவட்டத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் 7ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி!

## அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி தலைமையில் அமைதிப் பேரணி!

நாகை, ஆக. 9 -

நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 7ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நாகையில் உள்ள நாகை மாவட்ட தி.மு.க. அலுவலகமான தளபதி அறிவாலயத்தில் வைக்கப்பட்டுள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவச் சிலைக்கு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில்மகேஷ் பொய்யாமொழி தலைமையிலும், நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் முன்னிலையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். அதைத் தொடந்து 120 தூய்மை பணியாளர்களுக்கு அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி வழங்கினார்.

அதைத் தொடர்ந்து கலைஞர் பிறந்த திருக்குவளையில் கடைத் தெருவில் இருந்து கலைஞர் இல்லம் வரை அமைத்தி பேரணி அமைச்சர் அன்பில்மகேஷ்பொய்யாமொழி, நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

பின்னர் கலைஞர் வீட்டில் வைக்கப்பட்டுள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிலைக்கு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தலைமையில், மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் முன்னிலையில் கழகத்தினர் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

அதைத் தொடர்ந்து கலைஞர் இல்ல வளாகத்தில் 50 மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளும், கலைஞர் தொடக்கப் பள்ளி பயின்ற ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் உள்ள மாணவ மாணவிகளுக்கு திருக்குறள் புத்தகத்தையும் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி வழங்கினார்.

இதேப்போல் நாகை மாவட்டத்தில் அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் அமைதி பேரணி மற்றும் கலைஞர் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சிகள் நடைபெற்றது. நிகழ்ச்சிகளில் முன்னாள் அமைச்சர் உ. மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராசன், க.இராஜேந்திரன், இல.மேக நாதன், க.மறைமலை, மாவட்டக் கழக நிர்வாகிகள் மு.லோகநாதன், ரவிச்சந்திரன், ஆரூர்மணிவண்ணன், கற்பகம், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர். அருள்செல்வம், மாநில தீர்மானக்குழு உறுப்பினர் என்.வி.காமராஜ், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி. மனோகரன், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மகா.குமார், ஆர்.டி.எஸ். சரவணன், செல்வ.செங்குட்டுவன், ஆ.தாமஸ் ஆல்வா எடிசன், கே.பழனியப்பன், சிக்கல் என். ஆனந்த், என்.சதாசிவம், உதயம் வே.முருகையன், சோ.பா.மலர்வண்ணன், நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, மா. மீ.புகழேந்தி, எம்.ஆர்.செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் கோசி. குமார், இல.பழனியப்பன், பன்னீர்செல்வம், பேரூர் செயலாளர்கள் கா.அட்சயலிங்கம், மரியசார்லஸ், முக மதுசுல்தான், சுப்பரமணியன் மற்றும் சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள், இந்நாள் பிரதிநிதிகள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகத்திற்கு

# உச்ச நீதிமன்றம் 10 லட்ச ரூபாய் அபராதம் விதித்தது வரவேற்கத்தக்கது!

## புதுக்கோட்டையில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!



புதுக்கோட்டை, ஆக. 9 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு நாள் இன்று அனுசரிக்கப்பட்டு வருகிறது.எஸ். அதனை தொடர்ந்து புதுக்கோட்டை மாவட்ட திமுக சார்பில் மாவட்ட திமுக அலுவலகத்தில் கலைஞர் படத்திற்கு அமைச்சர் எஸ்.கே.கே.ரகுபதி மாவட்டச் செயலாளர் செல்லபாண்டியன் ஆகியோர் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். அதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள கலைஞர் கருணாநிதி திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதனைத் தொடர்ந்து அமைச்சர் எஸ்.ரகுபதி செய்தியாளர்களிடம் பேசுகையில்

போலீசாரை தாக்கிவிட்டு செல்லும்போது தான் என்கவுண்டர் சம்பவங்கள் நடக்கிறது, இல்லையென்றால் நடக்காது, வேண்டுமென்றே யாரும் என்கவுண்டர் சம்பவங்களை நடத்துவதில்லை.

முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகத்திற்கு உச்ச நீதிமன்றம் 10 லட்ச ரூபாய் அபராதம் விதித்தது வரவேற்கத்தக்கது

அரசின் திட்டங்களுக்கு முதலமைச்சரின் பெயரை அதிமுக ஆட்சிக்காலத்திலும் வைத்திருந்தார்கள்,

பெயர் வைப்பதில் நாங்கள் எங்களுக்காக போராடவில்லை உங்கள அதிமுகவுக்காகவும் போராடி நாங்கள் வெற்றி பெற்றுள்ளோம்,

எங்களுக்கு கட்சி வேறுபாடு கிடையாது பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் இரட்டை சதவீத பொருளாதார வளர்ச்சி அவர்களால் எட்ட முடிந்ததா திமுக ஆட்சியில் தமிழகத்தில் இரட்டை சதவீத பொருளாதார வளர்ச்சி எங்களால் எட்ட முடிந்தது.

இது முழுக்க முழுக்க தமிழக அரசு மட்டுமல்லாமல் முதலமைச்சரின் முயற்சியால் கிடைத்தது.

அவருக்கு கிடைத்துள்ள மிகப்பெரிய அங்கீகாரம் இது.

திருவாரூரில் கலைஞர் பல்கலைக்கழகம் அமைப்பதற்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்காமல் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி உள்ளார். குடியரசு தலைவர் என்ன முடிவு அறிவிப்பார் என்பதை பொறுத்திருந்து பார்த்து அதன் அடிப்படையில் எங்களது அடுத்த கட்ட நடவடிக்கை இருக்கும்.

எதிர்க்கட்சி சட்டம் ஒழுங்கு சரியாக உள்ளது என்று சர்டிபிகேட் யாரும் கொடுக்க மாட்டார்கள்

எடப்பாடி இடமிருந்து நாங்கள் அந்த சர்டிபிகேட்டை எதிர்பார்க்கவும் இல்லை. மக்கள் எங்களுக்கு சர்டிபிகேட் அளித்து வருகின்றனர்

மக்கள் சட்டம் ஒழுங்கு சரியாக உள்ளது. நாங்கள் பாதுகாப்பாக உள்ளோம் என்று கூறி தான் தொடர்ந்து வெற்றி தேடித் தருகின்றனர்.

யாரையும் குற்றம் செய்யாமல் தடுக்கக்கூடிய வழிமுறைகள் எங்கேயும் இல்லை. குற்றம் நடந்த பிறகு குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு வருகின்றனர். அதைத்தான் பார்க்க வேண்டும்.

தவறு நடந்துவிட்டால் உடனடியாக குற்றவாளியை கண்டுபிடித்து அவர்களுக்கு தண்டனை வாங்கித் தரும் ஒரே அரசு தற்போதைய தமிழக அரசு.

காவல்துறையை தாக்கி குற்றவாளி தப்பிக்க முயன்றால் அவர்களை என்கவுண்டர் செய்துதான் புடிக்க வேண்டும் அதன் அடிப்படையில் தான் இன்று என்கவுண்டர் செய்யப்பட்டுள்ளத

ஆணவ படுகொலைகள் நடக்கப்போகிறது என்பதை யாருக்கும் தெரியாது, குற்றம் நடந்த பின்பு கொலையாளிகளை கண்டறிந்து கடுமையான தண்டனை பெற்றுக் கொடுத்து வருகிறோம்

இந்தியாவிலேயே கட்டுமான பொருட்கள் தமிழகத்தில் தான் தங்கு தடை இன்றி கிடைக்கிறது

மத்திய இணை அமைச்சர் எல்.முருகனுக்கு தமிழகத்தில் எத்தனை தொழிற்சாலைகள் வந்துள்ளது வேலை வாய்ப்பு எவ்வளவு வந்துள்ளது என்பது குறித்து தெரியாதா?

பொறியியல் படித்த மாணவர்கள் தமிழகத்தில் தான் அதிகம் பேர் வருகின்றனர். அவர்களுக்கு உரிய வேலை வாய்ப்பு தமிழகத்தில் கிடைத்து வருகிறது.

விஜயகாந்தின் பெயரை அரசியல் கட்சிகள் பயன்படுத்தக் கூடாது என்று பிரேமலதா விஜயகாந்த் கூறியுள்ளது தொடர்பாக கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர் நாங்கள் யாருடைய பெயரையும் தெரிவித்து வாக்குகளை வாங்கும் நிலையில் இல்லை. நாங்கள் எங்களுடைய தலைவர்கள் கூட்டணி கட்சி தலைவர்களின் பெயர்கள் கூறி வாக்குகளை பெறுவோம்.

தமிழகத்தில் காவல்துறைக்கும் பாதுகாப்பு உள்ளது எங்கேயும் பாதுகாப்பு இல்லை என்ற நிலை இல்லை. ஏதோ ஒரு சில நேரங்களில் இது போன்ற நிகழ்வுகள் நடந்து வருகிறது. இதைவிட மோசமான நிகழ்வுகள் வடமாநிலங்களில் நடக்கிறது. அதை ஒப்பிட்டு பார்க்கும்போது தமிழகத்தில் மிக மிகக் குறைவு.

எடப்பாடி பழனிச்சாமி மீது கூறும் எந்த குற்றச்சாட்டுக்கும் அவர் பதிலளிக்க மாட்டார். மௌனமாகவே இருப்பார். மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி என்று நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# தொழிற்சங்கத் தலைவர் இரெ. கோவிந்தசாமி மறைவு!

## தொ.மு.ச. பேரவை இரங்கல்!



சென்னை, ஆக.9 -

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நீண்டகால உறுப்பினரும், கழகத்தின் வளர்ச்சிக்காகவும், தமிழ்நாடு மின் கழக தொ.மு.ச. வில் தொடக்கக் காலத்திலிருந்து சங்கத்திற்காக பாடுபட்டவரும், அச்சங்கத்தின் தலைவராகவும், பொதுச் செயலாளராகவும் பணியாற்றி, மின் கழக தொ.மு.ச. வளர்த்ததில் பெரும் பங்கு வகித்தவரும், தொ.மு.ச. பேரவையின் நீண்ட காலம் துணைத்தலைவராக பணியாற்றிவரும், தொ.மு.ச. பேரவையின் அதிகாரபூர்வ மாத இதழாக வெளிவந்து கொண்டிருக்கும் "உழைப்பாளி" மாத இதழின் ஆசிரியராக பணியாற்றியவருமான இரெ. கோவிந்தசாமி அவர்கள் 07.08.2025 அன்று காலை மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் நேற்று (08.08.2025) சென்னை, மேற்கு தாம்பரம், ரமேஷ் நகர், எண். 8, 3வது குறுக்கு தெருவிலிருந்து புறப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது.

அவருடைய குடும்பத்தாருக்கும், அவரோடு பணியாற்றிய தொழிற்சங்க நண்பர்களுக்கும், தொ.மு.ச. பேரவை ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.



தேசிய கைத்தறி தினம் மற்றும் சர்வதேச கூட்டுறவு ஆண்டை முன்னிட்டு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் மாவட்டம், வனவாசியில் கைத்தறி நெசவாளர்களுக்கான இலவச சிறப்பு மருத்துவ முகாமினை தொடங்கி வைத்து, நெசவாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.இரா.பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி, கைத்தறித்துறை துணை இயக்குநர் ர.ஸ்ரீதரன் மற்றும் கைத்தறி துறை அலுவலர்கள் மற்றும் பல்வேறு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களைச் சேர்ந்த நெசவாளர்கள் உள்ளனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி தி.மு.க. வழக்கறிஞர்கள் அணி சார்பில் கோவை ஒருங்கிணைந்த நீதிமன்றம் வளாகம் முன்பு அவரது திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து நினைவஞ்சலி நிகழ்ச்சி கோவை மாநகர் மாவட்ட வழக்கறிஞர்கள் அணி அமைப்பாளர் எஸ்.அன்புச் செழியன் தலைமையில் நடைபெற்றது.நிகழ்ச்சியில் தி.மு.க சட்டத்துறை இணைச் செயலாளர்கள் கே.எம்.தண்டபாணி, பி.ஆர்.அருள்மொழி, மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் மூ.மருதுபாண்டியன், துணைத்தலைவர் மணிவேல், என்.ஆர்.விக்ரம், ஜி.டி.ராஜேந்திரன், ந.கனகராஜ், குமணன், ராஜமாணிக்கம், மதிவாணன், ரத்தினகுமார், முகமது முனீர், சி.என்.சந்திரன், எஸ்.ரவிச்சந்திரன், இளங்கோ,வெற்றி, ராஜேஸ்குமார், வெங்கடாசலம், நிஜலிங்கப்பா. ஸ்ரீஹரி, குணசேகரன்,லிங்கராஜ், பத்மநாபன், ஆண்டவர், ஏ.எம்.சரவணன், ஜெயப்பிரகாஷ், நூருல் அமீன், பிரசாந்த், தமிழ்ச்செல்வி, மகேஸ்வரி, கோகிலவாணி, ஜீவா,சத்யபாமா, உள்ளிட்ட அனைத்து கழக வழக்கறிஞர்கள் அஞ்சலி செலுத்தினர்.



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டப் பொறியாளர் அணி துணை அமைப்பாளர் சிவகுமார் உடல்நலக் குறைவால் காலமானார். அவரது உடலுக்கு மாவட்டச் செயலாளர் ஒசூர் சட்டமன்ற உறுப்பினர் ஒய். பிரகாஷ் அஞ்சலி செலுத்தி, அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

உடன் மாவட்ட துணைச் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி. முருகன், பொதுக்குழு உறுப்பினர் ஜெயராமன், ஒன்றிய செயலாளர் ரகுநாத் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.